பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6

குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பிஎச்.டி.

முன் பக்கத் தலைப்பு விளம்பரம்

அன்றாடக் கட்டணம் :
(ஒரு தடவைக்கு) 15—00

நீடித்த ஒப்பந்தம் :
( 26 முறையும் அதற்கு மேலும் )
ஒரு தடவைக்கு : 12—00

மலர் 1 | மதுரை கார்த்திகை உ (17-11-66) வெளியீடு கார்த்திகை ங (18-11-66) | இதழ் 149

# ‘வன்முறைக் கிளர்ச்சி வேண்டாம்’

## மாணவருக்குச் சவான் அறிவுரை

புதுதில்லி, நவ 16—

வருகின்ற 18-ஆம் நாள் பாராளுமன்றத்தை நோக்கிப் புதுதில்லி மாணவர்கள் ஊர்வலமாகப் புறப்பட இருக்கின்றனர். இவ் ஊர்வலம் குறித்துச்சவான்குறிப்பிடுகையில், “ஆரவாரங்களினுலோ கிளர்ச்சிகளினுலோ பாராளுமன்றத்தின் கருத்தை ஈர்க்க முயல்வது தவிர்க்கப்பட வேண்டும். இது மாணவர்களின் நலனுக்கு உகந்ததல்ல” என்று கூறினர்.

மாணவர்கள் நடத்த இருக்கும் ஊர்வலம் பற்றிய கருத்து ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றிற்கு விடையளிக்கும் போது உள்துறை அமைச்சர் சவான் அறிக்கை ஒன்று இன்று மக்களவையில் வெளியிட்டார். சவான் உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின் வெளியிட்ட முதல் அறிக்கை இதுவே யாகும்.

“ஆரவாரங்களினுலும் கிளர்ச்சியினுலும் பாராளுமன்றத்தின் கருத்தை ஈர்ப்பதற்கு மாணவர்கள் முயலுதல் வேண்டா. இத்தகைய கிளர்ச்சிகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்பது குறித்தே இந்த ஊர்வலத்திற்குத் தடை விதித்துள்ளோம். எனவே இத்தடை முறையானதே; தவறானதன்று. மாணவர்களுக்குப் பல துன்பங்களும் சிக்கல்களும் இருக்கலாம். ஆனுல் அவற்றை நேரடிப் பேச்சின் மூலம் தீர்த்துக் கொள்வது குடியாட்சி முறைக்கு உட்பட்டதாகும். அவ்வாறு மாணவர்களுடன் நேரடிப் பேச்சு நடத்த அரசு ஆயத்தமாக உள்ளது. இதற்கு மாணவர் இணங்குவரேல் அரசு அகமகிழும்.

மாணவர்களின் நோக்கங்கள் நல்லவையாயிருப்பினும் நோக்கங்களை அடையும் குடியாட்சிக்கு' உட்பட்டதாக இருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி ஆரவாரங்களிலும், கிளர்ச்சிகளிலும் மாணவர் ஈடுபடுவரேல் அவை வன்மையாக ஒடுக்கப்படும்”

இவ்வாறு சவான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### லோகியா கைது!

மாணவர்களின் ஊர்வலத்திற்குத்தடை விதித்த பின்னரும் தடையை மீறி மாணவர்கள் ஊர்வலம் செல்ல வேண்டுமென வலியுறுத்திய ச. சோ. கட்சித் தலைவர் டாக்டர் இராம்மனோகர் லோகியாவும், இராசு நாராயண (பாராளுமன்ற உறுப்பினர்) னும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 107, 151 குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ்க்காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

அமைதியான முறையில், தடையை மீறி ஊர்வலம் செல்ல வேண்மென இவர்கள் மாணவர்களை வலியுறுத்தியுள்ளனர்.

—✶—

## பாலாற்றில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது

( கு. செ. து. )

ஆம்பூர்—12

ஆம்பூரில், பாலாற்று வெள்ளத்தில் மூழ்கி இருவர் இறந்தனர். இதில் ஒருவர் ‘‘பி. இ’’ பட்டம் பெற்றவர். இன்னொருவர் ஆம்பூரைச் சேர்ந்தவர். இருபது அகவை நிரம்பியவர். உடல் இன்னும் கிடைக்கவில்லை. வெள்ளத்தில் மூழ்கியதால் சுமார் 6அடி உயரத்தில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது.

### பாராளுமன்றம் தள்ளிவைப்பு

புதுதில்லி, நவ. 16

‘‘சம்யுக்த சோசலிசக்’’ கட்சி உறுப்பினர் மணிராம் பக்ரி பாராளுமன்றத்தை விட்டு வெளியேற மறுத்ததால் பாராளுமன்றம் (பிற்பகல் இரண்டு மணியளவில்) பதினைந்து நிமிடங்களுக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

இவர் பாராளுமன்றத்திலிருந்து பத்து நாட்கள் தற்காலிகமாக நீக்கப்பட்டவர் ஆவார்.

எனவே இன்றைய பாராளுமன்றக் கூட்டத்திற் பங்கு கொள்ள இவர் முயன்றமையால் இவர் வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்கும் இவர் மறுத்தமையால் பாராளுமன்றம் தள்ளிவைக்கப்பட்டது.

## நாகர்களுக்குத் தனிநாடு அளிக்கப்படாது

### மக்களவையில் அறிவிப்பு

புதுதில்லி நவ 16.

அமைச்சர் தினேசுசிங் தலைமறைவு நாகர்களுடன் நடத்தப்பட்ட பேச்சு குறித்து மக்களவையில் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

நாகர்களுக்குத் தனிநாடு அளிக்கும் எண்ணமே இந்திய அரசுக்குக் கிடையாது. தலைமறைவு நாகர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கு இந்திய அரசின் இக் கொள்கை தெளிவாக்கப்பட்டு விட்டது.

நாகர்களின் நலனுக்காக ஆவன செய்வதற்கு அரசு எப்பொழுதும் ஆயத்தமாய் உள்ளது.

நாகர்கள் நேரடிப் பேச்சின் மூலம் அரசினருடன் தங்கள் குறைகளைத் தெரிவித்து போக்கிக்கொள்ள வேண்டும்.

நாகர்களின் முன்னேற்றத்திற்கான ஆக்கப்பணிகளுக்கு அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

ஆனுல் நாகர்கள் தங்கள் நலத்தைப் பேணத் ‘‘தனிநாடு வேண்டும்” என்று கேட்பது முரணானதும் முறையற்றதுமாகும். அவ்வாறு நாகர்கட்குத் தனி நாடளிக்கும் எண்ணம் அரசினர்க்குக் கிடையாது.


## பம்பாயில் தமிழ்த் தென்றல்!

( சிறப்புச் செய்தியாளர் )

பூந்தமிழ்த் தென்றல், புதுமை நிறை கருத்துக்கள் கொஞ்சும், நெஞ்சுடையோன் கன்னித்தமிழ் காக்கும் கலைஞர் பெருமகன் கருணாநிதி. முகம் நிறைய வெற்றிப் புன்னகை பொங்க மாலை 3-35 மணி அளவில் பம்பாய் ‘‘போரிப் பந்தர்’’ தொடர் வண்டி நிலையத்தில் வந்து இறங்கினர்.

தமிழ்ப் பெருங்கடலெனத் திரண்டு நின்ற துடிப்பு நிறை இளம் நெஞ்சங்கள் தாங்கிய சிங்கங்கள் எல்லாம் தங்கள் கரங்களிலே, இருவண்ணக் கொடிகள் தாங்கி ‘‘அண்ணா வாழ்க, கருணாநிதி வாழ்க, கன்னித்தமிழ் வாழ்க’’ என்று முழக்கமிட்டனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் இம் முழக்கம்விண்ணையும் மண்ணையும் அதிர வைத்தது.

பின்னர் கருணாநிதி அவர்கள் தொண்டர்படை அணிவகுப்பைப் பார்வையிட்டார். தொண்டர்ப்படைத் தலைவர் கரந்தை எசு. எம். சுப்பையா கலைஞருக்கு மலர்மாலை இட்டு வரவேற்றார். [illegible] தொடர்ந்து, மலர்மாலை அணிவித்தனர். பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக சங்கத்தின் துணைச் செயலர் கருணாநிதி அவர்களுக்கு மாலை அணிவித்தார்.



தொண்டர்படை அணிவகுப்பு அங்கிருந்த வடவரை கூடக் கவர்ந்திழுத்தது. அத்தனைச் சிறப்பாக தொண்டர் படை அமைந்திருந்தது.

பின்னர் கருணாநிதி அவர்கள் உடனடியாக ஊர்வலத்தில் கலந்து கொள்ளப் புறப்பட்டுச் சென்றார்.

### ஊர்வலம்!

ஊர்வலம் மாலை 5½ மணி அளவில் தொடங்கியது. ஊர்வலம், மாதுங்கா போதார் கல்லூரியில் இருந்து தொடங்கியது. நன்கு அலங்கரிக்கப்பட்ட உந்துவண்டியில் கருணாநிதிஅவர்கள் அமர்ந்து இருந்தார். ஊர்வலத்தின்சிறப்பினை எடுத்துரைக்க! எடுத்துரைக்க எழுத்திலடங்காது. அதன் மாட்சி அளவிடற்கரியது.] ஊர்வலத்தின் முன்னே தமிழ் நாட்டின் கொட்டு மேளம் முழங்கியது. குழல் இசை இன்னிசை எழுப்பியது.

மாட்டுவண்டிகளில் காங்கிரசு ஆட்சியின் சீர்கேட்டை விளக்கும் வரைபடங்கள் தாங்கிய பலகைகள்வைக்கப் பட்டு முன்னேதொண்டர்கள் அதை விளக்கி முழக்கங்கள் எழுப்பிச் சென்றனர்.

தொண்டர் படைத் தலைவர்கள் வெண்ணிறக் குதிரைகளில் அமர்ந்த கூட்டத்தினைக் கண்காணித்து வந்தக் காட்சி கூட்டத்திற்கே ஓர் அழகு ஊட்டியது.

போதார் கல்லூரியில் இருந்து மாதுங்கா அஞ்சல் நிலையம் வரை, தென் இந்திய மலர் ஆரம் தொடுக்கும் தொழிலாளர்கள் வளைவுகள் (வண்ண வண்ண வளைவுகள்) அமைத்திருந்தனர். அவ்வளைவுகள் மலர்களாலே அமைக்கப்பட்டு இருந்தன. கருணாநிதி வரும் பொழுது வளைவுகளின் மேல் இருந்து கொண்டு மலர் [illegible] கருணாநிதி அவர்களின்

(7-ம் பக்கம் பார்க்க)

# குறள்நெறி
தமிழ்வாழ்க

தி. வ. ஆண்டு கக்கூ௭ கார்த்திகை உ வியாழன்


வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல். — குறள்

## செய்திகளை மறைத்தல் வேண்டுமா?

உலக இதழ்க்கழக 15-வது மாநாட்டு விருந்தில் உரையாற்றிய திருமதி இந்திரா அவர்கள் "மாணவர்களின் கிளர்ச்சிகட்குச் செய்தி இதழ்கள் வேண்டப்படாத விளம்பரம் கொடுத்துள்ளமை, மேற்பகுதிகட்கும் கிளர்ச்சி பரவுவதற்குத் தூண்டுதல் போலாகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே கிளர்ச்சிகள் பற்றிய செய்திகளை வெளியிட வேண்டாம் என மறைமுகமாகத் தெரிவித்துள்ளார் எனக் கொள்ளல் வேண்டும்.

கிளர்ச்சியென்பது இப்பொழுதுள்ள சூழ்நிலையில் அரசுக்கு மக்கள் கருத்தைத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்ட முறையேயாகும்.

அவ்வாறு நடைபெறும் கிளர்ச்சிகள் பற்றிய செய்திகளை இதழ்களில் வெளியிடாது போனால் ஆள்வோர், மக்கள் கருத்தை எவ்வாறு அறியமுடியும்? மக்களும் நாட்டின் நிலையை எங்ஙனம் அறிதல் கூடும்? மாணவர்களாயினும் மற்றவர்களாயினும் கிளர்ச்சியிலிறங்கக் கூடிய சூழ்நிலை உருவாகாது பார்த்துக் கொள்ளவேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் "இன்று கிளர்ச்சியின்றிக் கேட்பது கிடைத்தல் அரிது" என்று மக்கள் கருதுமாறு அரசு செயல்படுகின்றது.

ஆகவே கிளர்ச்சியைக் கருவியாகக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் மக்கள். மக்கள் செய்யும் கிளர்ச்சிகளை மற்றச் செய்திகளை வெளியிடுவதுபோலவே வெளியிட வேண்டிய பொறுப்பு செய்தி இதழ்களுக்கு உண்டாகின்றது. அப்பொறுப்பை நிறைவேற்ற வேண்டாம் என்பது எங்ஙனம் பொருந்தும்?

அரசுக்கு வேண்டிய செய்திகளை மட்டும் வெளியிட்டு வேண்டாத செய்திகளை வெளியிட வேண்டாமெனில் செய்தி இதழ்களே வேண்டாமே. அரசு நிகழ்ச்சிகளை அரசினரே பலவகையிலும் பரப்பி வருகின்றனர் அன்றோ!

வல்லாட்சி நாட்டில்தான் செய்தி இதழ்கள் ஆட்சியாளர் விரும்பும் செய்திகளை மட்டும் வெளியிடலாம் என்ற நிலை உண்டு. மக்களாட்சி நாட்டில் அனைத்துச் செய்[illegible]றல் [illegible] [illegible]யான மக்களாட்சியாகக் கொள்ளல் இயலாது. மக்களாட்சிப் போர்வையில் வன்முறை ஆட்சி நடைபெறுவதாகவே கருத வேண்டி வரும்.

இந்தியக் கூட்டரசின் தலைமையமைச்சர், இந்நாட்டிலும் மக்களாட்சிப் போர்வையில் வல்லாட்சி நடாத்த விரும்புகின்றனர் போலும். அதனால்தான் மாணவர் கிளர்ச்சிக்கு விளம்பரம் தராதீர் என்று வேண்டும் நிலைக்கு இறங்கியுள்ளார். இது மிக மிக வருந்தத்தக்கது. செய்தி இதழ்கள் மக்களாட்சியைச் செம்மைப் படுத்த உள்ளனவேயன்றிச் சிதைப்பதற்கு அன்று. செய்தி இதழ்கள் செய்திகளைக் கூட்டாமலும் குறைக்காமலும், மறைக்காமலும், மாற்றாமலும் வெளியிடும் பொறுப்பை உடையன. அப்பொறுப்பினை நன்கு நிறைவேற்ற உதவுவதே ஆட்சியாளர் கடனாகும்.

## அனைத்துக் கட்சியினர்க்கும் அன்பார்ந்த வேண்டுகோள்

தமிழ்க்காப்புப் பணியில் ஈடுபட்டதனால் வெஞ்சிறைப்பட்டும் பதவியை இழந்தும் பல இன்னல்களுக்கு ஆளாகியும் உள்ள என்னை அனைத்துக் கட்சியின் சார்பாகத் தேர்தலுக்கு நிற்க உதவுமாறு அன்போடு வேண்டுகின்றேன். திருப்பரங்குன்றத் தொகுதியில் நான் நிற்கப்போவதால் வேறு யாரையும் நிறுத்தாது அனைத்து எதிர்க்கட்சிகளும் என்னையே தத்தம் கட்சிச் சார்பாளனாகக் கொள்ள வேண்டுகின்றேன்.

இந்திக்கு முதன்மைதரும் காங்கிரசுக்கு எதிராக என்னை ஒருவனையே நிறுத்தி வெற்றிவாய்ப்பு ஏற்பட வழிகோலுமாறு எல்லா எதிர்க்கட்சியினரையும் அன்போடு வேண்டுகின்றேன். எனதுவெற்றி தமிழின் வெற்றியாகும். இந்தியின் தோல்வியாகும்.

இ. இலக்குவன் [signature]

## தி. மு. க. பொதுக்கூட்டம்

வற்றுயிருப்பு, நவ. 14- வற்றுயிருப்பை அடுத்துள்ள கந்தசபாண்டியத்தில் தி.மு.க. பொதுக்கூட்டம் கருப்பசாமி தலைமையில் நடைபெற்றது. நெல்லை நெடுமாறன் காங்கிரசாட்சியின் உணவுக்கொள்கையை எதிர்த்துப் பேசினார். குடியாட்சி தழைக்க தி. மு. க ஆட்சிக்கு வரவேண்டும் என்றும் அதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். மற்றும் அதிவீர பாண்டியன், துரை-நாராயணன், சீனிவாசன் ஆகியோர் பேசினர்.

கருப்பசாமி நன்றி கூறினார்.

## அன்னைத் தமிழ் தழைக்க ...

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1. மருத்துவக் கல்லூரிக்குள் கட்சிக் கொடியுடன் தலைவர்கள் உலாவுவதையும், மாணவர்களிடையே பிளவை ஏற்படுத்த முயற்சிப்பதையும், விடுதி காப்பாளர் திரு. ஆசிர்வாதம் அவர்கள் ஒர வஞ்சகமாக நடப்பதையும், கல்லூரி எல்லைக்குள் காவலர்கள் நிறுத்தப் பட்டிருப்பதையும் இக் கூட்டம் கண்டிக்கிறது. இவற்றை நீக்க முயற்சிக்கும்படி மாவட்ட ஆளுநர், காவல்துறை ஆணையாளர் ஆகியவர்களைக் கேட்டுக் கொள்கிறது. விடுதியிலிருந்து நீக்கப் பட்டிருக்கும் மாணவர்களை உடனே சேர்த்துக் கொள்ளுமாறு முதல்வரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

2. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப் பட்ட சேலம் உருக்காலை, நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாமல் வழிவழியாகத் தென்னாட்டைப் புறக்கணிக்கும் தில்லி நடுவண் அரசின் மாற்றாந்தாய்ப் போக்கினை இக்கூட்டம் கண்டிக்கிறது. குறுகிய செலவில் பெருகிய பலன் தரும் சேலம் உருக்காலைத் திட்டத்தை இப்பொழுது நிறைவேற்ற வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

## பம்பாயில் தமிழ்..

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேல் மாரிபோல் பொழிந்தார்கள். மேலும், கலைஞர் அவர்களின் உந்து, மலர்க்கடையை அடையும் பொழுது பூக்கடையின் உரிமையாளர் கலை ஒருக்கு பெரியதொரு [illegible] 1967-இல் தி. மு. க. ஆட்சி ஏறவேண்டும் என்று வாழ்த்தினார்.

ஊர்வலம், அஞ்சல் நிலையத்தைத் தாண்டியதும், மாதுங்கா திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருந்த வீதிவளைவுகள் கண்ணைக் கவர்ந்தன. வளைவுகள் விண்ணைத் தொடுமாப்போல் வளர்ந்திருந்தன. வளைவுகளில் "தமிழ்த் தென்றலே "வருக!" வருங்கால தமிழ் அமைச்சரே வருக! தமிழ்க் காக்கும் தலைவனே வருக" என்ற சொற்களை பொறித்திருந்த விதமே கருத்தைக் கவரும் வேலைப்பாட்டுடன் மிளிர்ந்தது. கருணாநிதியின் உந்துவண்டி, கேவிகசவடிக்கடையை (Book Stall) அடைந்த பொழுது திருகேவிக பெரியதொரு மலர் மாலை அணிவித்து மகிழ்ந்தார்.

ஊர்வலம் எந்த ஒருபோக்குவரத்திற்கும் தடை இல்லாமல் கட்டுப்பாட்டுடன் சென்ற காட்சி, அமைதி காத்துநின்ற காவலரின் பாராட்டைப் பெறும் வண்ணம் இருந்தது.

ஊர்வலம் 2 மைல் நீளம் அமைந்திருந்தது. ஊர்வலம் "கிங்சர்க்கிளை" கடந்தது. சயான் பகுதியை ஊர்வலம் அடையும் பொழுது (இரவு) 7½ மணி இருக்கும்.

ஊர்வலம் சயான்விவேக் சிற்றுண்டிக்கடையை அடையும்பொழுது அந்த சிற்றுண்டிக்கடைத் தொழிலாளர்கள் கலைஞருக்கு மாலை அணிவித்தனர்.

பின்னர் ஊர்வலம் சயான் பேருந்து நிலையத்தின் வழியாக வந்து, தமிழர் வாழ் பெரும் பகுதியாகிய, தாராவியினுள் நுழைந்தது.

தாராவியின் நுழைவாயிலில் இருந்து எண்ணற்ற வீதி வளைவுகள், கண்ணைக்கவர்ந்து கருத்தைக் காக்கும் வண்ணம் அமைந்திருந்தன. தாரவிக்குள் ஊர்வலம் நுழைந்ததுமே ஊர்

(7-ம் பக்தி பார்க்க)

# "உணவு தர முடியாத காங்கிரசுக் கட்சியை பதவியிலிருந்து கீழிறக்க வேண்டும்"

## அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எசு. டி. கொழுந்து பேச்சு!

(கு. செ. து.)

திருவில்லிபுத்தூர், நவ. 16- இராமனதபுர மாவட்டம் திருவில்லிபுத்தூரில் அனைத்துக் கட்சிப் பொதுக் கூட்டம் திரு. ராமசெல்லம் தலைமையில் நடைபெற்றது. 'உணவு தரமுடியாத ஆளுங் கட்சியை வருகிற பொதுத் தேர்தலில் பதவியிலிருந்து கீழிறக்க வேண்டும்' இவ்வாறு திரு.எசு.டி. கொழுந்து கேட்டார். அவர் மேலும் பேசியதாவது:-

இந்த நாட்டு மக்கள் பசிக் கொடுமையால் மிகவும் இன்னலுறுகின்றனர். பட்டினி ஒன்றே மக்களின் சொத்தாக மாறி விட்டது. உண்ண உணவு கொடு என்று கேட்ட மக்களுக்கு தமிழகத்தை ஆளுகிற கெட்டிக்கார அமைச்சர்கள் என்று சொல்லப்படுகிற எட்டுப்பேர் அறிவுரை கூறுவது வழக்கமாகிவிட்டது.

பால் சாப்பிடுங்கள் என ஒரு அமைச்சரும், பழம் சாப்பிடலாமே என ஒருவரும், மாறி மாறி, சொல்லுகிறார்கள். தமிழக இட்லர் பக்தவத்சலம் சாம்பாருக்கு விலை வைக்கச் சொன்னார், தலைமை அமைச்சர் இந்திரா உருளைக்கிழங்கை சாப்பிடச் சொல்கிறார். அகில இந்திய காங்கிரசுக் கட்சிப் பொதுச்செயலாளர் மணியன் பேரிச்சம் பழத்தை சாப்பிடச் சொல்கிறார். உத்திரப்பிரதேசத்தை சார்ந்த கெண்டாசிங் எலிக்கறியை சாப்பிடச் சொல்கிறார். இவ்வாறு ஒவ்வொருவரும் தான் தோன்றித் தனமாக தங்கள் அறிவுக்கேற்றவாறு எதையாவது சொல்கிறார்கள். அரிசியை சாப்பிட்டு பழக்கப் பட்டுப்போன நம் மக்களுக்கு மாற்று உணவு எப்படி உதவ முடியும்? '67க்கு பிறகு இவர்கள் கையிலே ஆட்சியை ஒப்படைத்தால் பாம்பைக் கூடத் தின்னச் சொல்லுவார்கள் அறிவு கெட்டவர்கள்.

உணவு தர முடியாத காங்கிரசு ஆட்சி தேவையா? என ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நல்ல அரிசி தர முடியாத காங்கிரசு ஆட்சியை 67ல் பதவியிலிருந்து கீழிறக்க வேண்டும். இவ்வாறு கூறி முடித்தார்.

## தேர்தல் களத்தில் யார்? யார்? எங்கெங்கே?

திருவில்லிபுத்தூர், நவ. 16— 1967 பிப்ரவரித் திங்கள் தமிழகத்தில் பொதுத்தேர்தல் நடைபெற இருக்கிறது. அதில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்தில் போட்டியிட இடம் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளவர்களின் விவரம்:—

1. திருவில்லிபுத்தூர் (தனித் தொகுதி)
ஆண்டி என்ற குருசாமி

2. இராசபாளையம் (பொதுத் தொகுதி)
நடராசன்

பூச்சப்பன் (பஞ்சாயத்து குழுத் தலைவர்)

3. சிவகாசி

சட்டமன்றத்தில் போட்டியிட அமுதன், ராமசாமி ஆகியோர் மனுச் செய்துள்ளனர், அமுதன் பட்டதாரி. அச்சங்குளம் ஊர் பஞ்சாயத்து உறுப்பினர். கழகப் பேச்சாளர்

4. சாத்தூர்

சாத்தூர் பாராளுமன்ற தொகுதிக்கு மாணவர் தலைவர் சீனிவாசன் மனுச் செய்துள்ளார். (இவர் வழக்கறிஞரும் ஆவார்.)

## திருப்பரங்குன்றம் தொகுதியில் தேர்தலில் நிற்கின்றேன்

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள நண்பர்கள் "நேரிலும் கடித வாயிலாகவும் வரும் 67ம் ஆண்டுத் தேர்தலில் நிற்கவில்லையா! தவறாது நின்று வெற்றி பெறவேண்டும். அதற்குரிய செயல் முறைகளில் இன்னும் ஈடுபடக்காணேமே!" என உசாவியவண்ணம் உள்ளனர்.

தமிழ் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள யாம் சட்ட மன்றத்திற்குச் சென்றும் தமிழைக் காக்கும் ஆக்கப் பணிகளை உருவாக்கப் பெரு விருப்புடையோம். இந்தி முதன்மை இன்னும் நீங்கியபாடில்லை. இந்தி முதன்மையை அகற்றப் பெரும் அறப்போரைத் தொடங்கத் தான்வேண்டியிருக்கும்போல்உள்ளது. சட்டமன்றத்தையும் அதற்குரியகளனாகக் கொள்ளவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்க் காப்புத் தொண்டில் ஈடுபட்டுள்ள எம்மை தி. மு. கழகத்தைச் சார்ந்தவனென்றே கருதியுள்ளனர். தி. மு. கழகம் இந்தியை எதிர்த்துத் தமிழ்க்காப்புப் பணியில் ஈடுபட்டுள்ளமையால் அதனை வலுப்படுத்தும் முயற்சியில் உழைத்து வருவதனால் அவ்வாறு மக்களும் அரசும் கருதுவதில் வியப்பில்லை. ஆயினும் யாம் இன்னும் தி. மு. க.வில் உறுப்பினராகவில்லை. ஏனெனில் தி. மு. க. மேலிடத் தலைவர்கள் "நீங்கள் தனியே இருந்து தொண்டாற்றுவதுதான் எங்கட்கு வலிவு; எம் கட்சியில் உறுப்பினராகச்சேரவேண்டியதின்று" என்று கூறினர் இக் காலத்தில் எக் கட்சியையும் சாராது தனித்து நிற்பதால் அரசியல் தொண்டு ஆற்ற முடியாது என்பதை யாவரும் அறிவர். ஆகவே தமிழ்க்காப்பு இயக்கம் ஒன்றைத் தோற்றுவித்துத் தொண்டாற்றி வரும் நான் அதன் சார்பிலேயே தேர்தலுக்கு நிற்க முடிவு செய்துள்ளேன். சிலர் பாராளுமன்றுக்கு நிற்குமாறு அறிவுரை கூறுகின்றனர்.

பாராளுமன்றத்தில் பைந்தமிழுக்கு உரிமையில்லை தமிழுக்கு உரிமையில்லாவிடத்தில் தமிழர்க்கு வேலையில்லை என்பது என் கொள்கை. ஆதலின் பாராளுமன்றத் தேர்தலுக்குத் தமிழகத்தில் இருந்து யாருமே போட்டியிடுதல்கூடாது தமிழுக்கு அங்கு உரிமை கிடைத்த பின்னரே தமிழர்கள் செல்லவேண்டும். தமிழர்கள் அதனைப் புறக்கணிப்பதன் வாயிலாகத் தமிழுரிமையைப் பெறுதல் வேண்டும் எனும்.

கோட்பாட்டை உடையோம். ஆகவே பாராளுமன்றத் தேர்வுக்குப் போட்டியிடாது சட்டமன்றத்தேர்தலுக்கு போட்டியிட எண்ணியுள்ளோம்.

அதுவும் யாம் தங்கியிருந்து அலுவல் புரியும் திருப்பரங்குன்றத் தொகுதியிலிருந்தே போட்டியிட எண்ணியுள்ளோம்.

தேர்தல் என்பது இக்காலத்தில் நம்நாட்டில் பல ஆயிர உருபாய்களைச் செலவழிக்க வைப்பது. பொருளில்லார்க்குத் தேர்தலில் இடமே இல்லை. ஆகவே அன்பர்கள் அவரவர்களால் இயன்ற பொருளுதவியைச் செய்து எல்லா வகையாலும் உதவுமாறு தமிழின் பேரால் வேண்டுகின்றேம்.

தனிப்பட்ட முறையிலும் கட்சி சார்பிலும் தமிழுக்காக அனைத்துப் பக்கங்களிலிருந்தும் உதவி வரும் என்று எதிர்பார்க்கின்றேம். தமிழ் வெல்க! வணக்கம்.

## இலக்கிய விழா

(கு. செ. து.)

வற்றுயிருப்பு, நவ. 16- வற்றுயிருப்பை அடுத்துள்ள மம்சாபுரத்தில் கிளை நூலகத்தின் சார்பில் இலக்கியவிழா நடைபெற்றது.

மாலை 6 மணியளவில் பட்டிமன்றம் நடைபெற்றது. நூலக ஆணையர் சான் நன்றிகூறினார்.

## கோவை வேட்பாளர்கள்

கோவை, நவ. 16— கோவையில் போட்டியிடப் போகும் வேட்பாளர்களில் பெரும் பணக்காரர்களுக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது

கோவை மேற்குத் தொகுதியில் சி. இ. சின்னத்துரையோ அன்றி நகர்மன்றத் துணைத் தலைவர் இராமநாதனோ போட்டியிடுவர்.

கோவை கிழக்கில் மிகப் பெரும் பணக்காரரும், [illegible] கோ. கல்லூரி முதல்வருமான கோ. அர. தாமோதரன் போட்டியிடுவார்.

கோவை பாராளுமன்றத் தொகுதி,திரு. மகாலிங்கமோ அன்றி, எசு. ஆர்.பி.பொன்னுசாமி (செட்டியார்) இடமோ ஒப்புவிக்கப்படும்.

இத்தொகுதியில் தி. மு. க. வின் சார்பில் திரு, செ. அ. அரங்கநாயகம் எம்.ஏ.பி.எல், அவர்களை நிறுத்துமாறு பல வழக்குரைஞர்கள், அறிஞர் அண்ணாவிடம் மனுக் கொடுத்துள்ளனர்.

திரு. அரங்கநாயகம் அவர்கள் திரு. கோ. அர. தாமோதரனை எதிர்த்து, ஆசிரியர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிக்கான வாய்ப்பை இழந்தவர்.

## மாணவர் பொதுக்கூட்டம்

(கு. செ. து.)

திருமங்கலம், நவ—16 மதுரை மாணவர் இந்தி எதிர்ப்புக் குழுவின் சார்பில், தேர்தல் விளக்கப் பொதுக் கூட்டம் திருமங்கலம் நகரில் 12—11—66ஆம் நாள் கொல்லர் திடலில் நடைபெற்றது. புலவர், காமாட்சி நாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். புலவர் ஆறுமுகம், அமைப்பாளர் இரா. சதாசிவம், சென்னை நகர மாணவர் தலைவர். திரு. கா. இராசா முகமது ஆகியோர் உரையாற்றினார்கள். அவர்கள் பேசும் பொழுது இந்த நாட்டின் ஆட்சி மொழியாவதற்கு இந்தி அருகதை அற்றதென்பதையும், இந்தி தென்னகத்தில் திணிக்கப்படுவதையும், இந்திக்குச் சலுகை தந்து இங்கு தமிழுக்கு வஞ்சகம் செய்து வரும் காங்கிரசிற்கு எதிராக பொதுமக்கள் வாக்களித்து, 1967-இல் அன்னைத் தமிழை அரியணை ஏற்ற வேண்டும் என்றும் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டனர்.

## தலைமை அமைச்சர் பதவிக்குத் தாவ காமராசர் முயற்சி?

-சோக்கி

'எப்படியும் வெற்றி'

இதுதான் காங்கிரசுக் கட்சி புரிந்துவருகிற அரசியலுக்கு நடை இயல்.

இந்த 'எப்படியும் வெற்றி' என்ற காங்கிரசுக்கே உரிய நடை இயலை வசப்படுத்தி இயக்குவதில்; காமராசர் கைதேர்ந்த புள்ளி.

இந்த நடை இயலின் அடிப்படையில்,

நேற்று தமிழக அரசியலையும்
இன்று அனைத்து இந்திய அரசியலையும்,

முறை தவறச் செய்து வருவதன் மூலம் தமது செல்வாக்கை போதிய அடிப்படையின்றியே உயர்த்திக் கொண்டு வருகிற காமராசர், எப்படியும் இந்தியக் கூட்டு அரசின் தலைமை அமைச்சர் பதவிக்குத் தாவிவிட வேண்டும் என்ற ஆசையில் திட்டமிட்டு முயன்று வருகிறார் — திரை மறைவில் — காங்கிரசு மேலிடப் பெரும் புள்ளி ஒருவர் இப்படிக் கூறுவதாக புதுடில்லி செய்தி இதழ் குறிப்பொன்று கூறுகிறது.

இந்தியத் தலைமை அமைச்சர் பதவி அடுத்த தடவை தமக்கு வாய்க்க வேண்டுமென்பதற்காகவேதான, நேரு மகள் இந்திராவை சாத்திரியாருக்குப் பதில் தலைமை அமைச்சராக்க அரும்பாடுபட்டாராம் காமராசர்.

கூட்டரசின் தொல்லையின் மக்களின் [illegible] வைப் பெற்ற [illegible] இல்லாத காங்கிரசு மேலிடத் தளர்வு — இருப்பவர்களில் பெருந் தலைவர்கள் என்று தம்மைத் தாமே சொல்லிக் கொள்வோரின் பதவி பேய்ச்சல் — ஒருவர் மீது ஒருவருக்குள்ள காய்ப்புகள் — தமக்குள்ள எதிர்ப்பற்ற ஏகபோக — இத்தனையும் மொத்தமாகத் திரண்டு, தலைமை அமைச்சராகும் [illegible] ராருக்கு ஊட்டிவிட்டதாம் — இதை [illegible] கிறது.

'எப்படியோ' என்ற அடிப்படையில் அரசியல் நடக்கும் நாட்டில், எல்லா நிகழ்ச்சிகளும், வெற்றிகளும், 'எப்படியோ' என்ற அளவில்தானே இருக்கும்! அதிலும் காமராசர் புரியும் அரசியலுக்கு ஏறக்குறைய எல்லாமே வெற்றிதான். ஆனால் அந்த வெற்றிகள், எப்படியோ என்ற அடிப்படையில் வாய்ந்த வாய்ப்புகளாக இருக்குமேயன்றி தடத்தோடு வந்த தரமான வெற்றிகளாக இரா இதை நாடு கண்ட — கண்டுவரும் உண்மை.

தமக்குள்ள பதவி, புகழ் எல்லாவற்றுக்குமே வாய்ப்புகள்தான் காரணமேயன்றி திறனோ, தெளிந்த அறிவோ அல்ல என்பது காமராசருக்குத் தெரியும். எனவே, எல்லாவற்றையும், எப்படியோ பிடித்தாகிவிட்டது— துய்த்தாகி விட்டது — முடிவில் இந்தியாவின் தலைமை அமைச்சராகவும் ஆகிவிடுவோம்—இதற்கும் அந்த 'எப்படியோ' என்ற அடிப்படை உதவும் என்ற நம்பிக்கையில், பெருமைமிகு காமராசர், தமக்குள்ள ஆசையை கழலவிட்டுப் பார்த்திருக்கிறார். அது வினை உருவம் பெற்று, கூட்டரசின் ஒருமைப்பாட்டுக்கே உலைவைக்கத் தொடங்கிவிட்டதாம்.

தலைமை அமைச்சராகி விட வேண்டும் என்ற காமராசரின் ஆசை, உள்ளத்திலிருந்து செய்தியாக வளர்ந்து, செயலாகக் காய்க்கத் தொடங்கி விட்டதையறிந்த திருமதி இந்திரா காந்திக்கு கடுங்கோபம் ஏற்பட்டு, "அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் "?...... என்ற எதிர்க் கேள்வி போட்டு,

"காமராசர் ஆட்சி மன்றத்தில் இடம் பெற்றால், நான் வெளியேறி விடுவேன். அதோடு, வருகிற தேர்தலில் காங்கிரசுக் கட்சி சார்பில் போட்டியிடவும் மாட்டேன்" என்று கடிந்து கூறி, அதைக் காமராசர் காதுகளுக்கும் எட்டும்படி செய்து விட்டார்—என்று அதே புதுடில்லிச் செய்தியில் ஒரு பகுதி விவரிக்கிறது.

பல மொழி, பலவித பண்பு நிலைகளைக் கொண்ட மக்கள் நிறைந்த நாடு இந்தியா—இங்கு வித விதமான சிக்கல்கள் விநாடிக்கு விநாடி விளைந்து கொண்டே இருக்கும்—அவைகளிலிருந்து மீண்டு, நாட்டை நடைபட விடாமல் நடத்துவதற்கு தகுதி முதன்மையேயன்றி வாய்ப்புகள் அல்ல—என்பது இந்திரா காந்தியின் கண்டிப்பான கருத்து.

தகுதி—வாய்ப்பு—என்ற இரு தரப்பனைகளை ஆராய்கிறபோது, காமராசருக்கு 'வாய்ப்புகள்' உதவுகிற மாதிரி, தகுதிகள் உதவுவது இல்லை. மேலும் காமராசர் இந்த அளவுக்கு—அதாவது நாட்டின் தலைமை அமைச்சராக ஆசைப்படும் அளவுக்கு ஒதுங்கி இருப்பதற்கு உதவி புரிந்தவை வாய்ப்புகளேயன்றி, திறமையின் பால் ஏற்பட்ட தகுதிகள் அல்ல. வாய்ப்பின்-அதிட்டத்தின்-தயவில் உயர்ந்துள்ள [illegible] விடும் — வாய்ப்புகளை வைத்து தலைவராக இருக்க முடியலாம்-தளபதியாகி விட முடியாது-ஆக முடிந்தாலும், நிலைமைகளைச் சமாளிக்க முடிந்த தகுதியும், திறனும் போதாது வாய்ப்பு வாய்ந்த தலைவர்கள், நாட்டாண்மைக்கு ஆசைப்படக்கூடாது.—மக்கள் ஆட்சியில் எவருக்கும், எந்தப் பதவியும் கிட்டும்தான்—ஆனால் தரக்குறைவான சில்லறை அரசியல்மூலம் பெற்ற பெரும் வாய்ப்புகளின் தயவை வைத்து ஆட்சித் தலைமைக்கு வலை வீசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்,—வாய்ப்புகளால் வளர்ந்த தலைவர்கள்—என்று இந்திரா காந்தி காமராசருக்குள்ள, தகுதி—வாய்ப்புகளை ஆள் குறிப்பிடாமலே கூறுமற கூறிவிட்டாராம்.

இதையடுத்து, இனி; இந்திய அரசியலில் தனிப்பாதை வகுத்துச் செல்லும் "காமராசிசம்", தனது வேலையைத் தீவிரப்படுத்தும்—அது மேலிட ஒற்றுமைக்கு உலை வைக்கும் அதன் மூலம் இந்தியநாடு எப்படியாகுமோ என்று புதுடில்லி பொது வட்டாரம் அஞ்சுகிறதாம்.

## பம்பாயில் தமிழ்..

(3-ம் பத்தி தொடர்ச்சி)

வலத்தில் ஓர் புது விழிப்புத் தோன்றியது. முழக்கங்கள் ஓங்கின. தாராவி கிளைக் கழகங்கள் பற்பல இடங்களில் வீதி வளைவுகள் அமைத்து இருந்தனர். ஊர்வலம் தாராவி படிப்பகத்தின் வழியாக நகர் மன்ற பூங்கா வழியாகச் சென்று, குலக்குமிகால் எம். சி. ஆர். மன்றத்தின் வளைவைத் தாண்டி, கணேசர் கோவில் வழியாக சென்றது, வழியில் அம்பேத்கார் மன்ற வளைவு, கலைஞர் மன்ற வளைவு, பத்த மடை அண்ணா மன்ற வளைவு ஆகிய வளைவுகளைத் தாண்டி தாராவியின் பெருவழியில் அமைக்கப்பட்டு இருந்த பெரியதொரு வளையை அடைந்தது. (ரேட்வாடி கலைஞர் கருணாநிதி மன்றம் அமைத்த வளைவு) அங்கு வெடி முழக்கங்களும், ஒலி முழக்கங்களும் விண்ணைப் பிளந்தன. கலைஞருக்கு மாலை அணிவித்தனர்.

பின்னர் ஊர்வலம் தாராவியின் பெருவழிவழியாக கூட்டம் நடக்கும் திடலை நோக்கி சென்றது. வழியில் திராவிட அகத்தின் முன்பு அமைக்கப்பட்டிருந்த பெரும் வளைவில் கருணாநிதியின் உந்து நின்றது, கலைஞர் அவர்கள்வளைவு நோக்கி புன்முறுவல் பூத்தார். மாலை அணிவிக்கப் பட்டது. பின்னர் ஊர்வலம் திடலை அடைந்தது.

(கலைஞரின் முழுப்பேச்சும் நாளை வெளிவரும்)

## கலை நிகழ்ச்சி

வற்றுயிருப்பு, நவ. 16- வற்றுயிருப்பு முத்தாலம்மன் திடலில் இளைஞர் காங்கிரசு சார்பாக இராசேந்திரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவில்லிபுத்தூர் வேலன், இராமசாமி ஆகியோர் பேசினர். பின்பு சென்னை டேப் நடராசனின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

மதுரை : 17—11—66 வியாழன்

# குறள் நெறி

வெளியூர்: 18—11—66 வெள்ளி

## தி. மு. க. ஆய்வுக்குழு தஞ்சை வருகை

(குறள்நெறிச் செய்தித் துறை)

தஞ்சாவூர், நவ. 16—

கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், சத்தியவாணி முத்து, அன்பில் தருமலிங்கம் ஆய தி.மு.க தலைவர்கள் அடங்கிய 'ஆய்வுக் குழு' இம்மாதம் 18 (நவம்பர்) ஆம் நாள் தஞ்சை வருகின்றது. இக்குழு வரும் தேர்தலில் போட்டியிடும் போட்டியாளர்களைத் (வேட்பாளர்களை) தேர்ந்தெடுக்க மாவட்டங்கள் தோறும் நேரிற் சென்று அறிந்து வருகின்றது. அவ்வாறு தஞ்சை மாவட்ட வேட்பாளர்களைத் தெரிந்தெடுக்க இக்குழு இங்கு வருகின்றது. தஞ்சை வந்து இங்குள்ள நிலைமைகளை ஆய்ந்த பின்னர் மாவட்டம் முழுதும் இக்குழு பயணம் செலுத்துமெனத் தெரிகிறது.

மேலும் அப்பொழுது, காங்கிரசு' வேட்பாளராக நிற்கும் பரிசுத்த நாடாரை எதிர்த்துப் போட்டியிடும் கழக வேட்பாளர் யார் என்பது தெரியும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

## திட்ட அரங்கு

பெருங்குடி, நவ. 13-

இங்குள்ள சரசுவதி நாராயணன் கல்லூரியிலிருந்து மாணவர் சார்பாளர்கள் பொருளியல் விரிவுரையாளர் திரு. இ. பாசுகரன் எம். ஏ. உடன் சென்னைத் திட்ட அரங்கு கூட்டத்திற்குச் செல்வதாக இருந்தனர். அக்கூட்டம் ஒத்தி வைக்கப் பட்டதால் இவர்கள் டிசம்பர் முதல் வாரம் செல்லவிருக்கின்றனர்.

செல்லும் மாணவர் சார்பாளர்கள்:—

1. மா. குருசாமி.
2. சு. செயராம் பாபு.
3. ம. கணபதி.
4. பாலகுருசாமி.

# "அன்னைத் தமிழ் தழைக்க ஆட்சியை மாற்ற வாரீர்!"

## -மாணவர் தலைவர் சீனிவாசன்-

மதுரை, நவ. 15-

**மாணவர் உலகம் தலைநிமிர்ந்து நிற்க, அன்னைத் தமிழ் தழைக்க வரும், பொதுத் தேர்தலில் காங்கிரசை ஆட்சியிலிருந்து அகற்றப் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்" என்று மதுரையில் மாணவர் தலைவர் சீனிவாசன் கேட்டுக் கொண்டார்.**

இக்கூட்டம் மாணவர் தேர்தல் படையின் சார்பில் நடைபெற்ற கொள்கைபரப்புக் கூட்டமாகும். இக்கூட்டத்தில் சென்னை மாணவர் இராசா முகமது மதுரை மாணவர் செயப்பிரகாசம் மற்றும் பல மாணவமணிகள் பேசினர்.

### சீனிவாசன்:

தமிழக இந்தி எதிர்ப்பு மாணவர் குழுத் தலைவர் சீனிவாசன் பேசுகையில், "மாணவர் தேர்தல் படைக்கு கதர்ச் சட்டை அணிந்த பெரிய மனிதர்களும், வருவாய்த் துறை அலுவலர்களும், காவல் துறையைத் தூண்டி விட்டு பலவிதத் தொல்லைகள் தருகின்றனர் என்று குறிப்பிட்டார். "மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் என்னவேலை? மருத்துவக் கல்லூரியில் இருந்து அறத்திற்குப் புறம்பாக வெளியேற்றப்பட்ட நான்குமாணவர்களின் உயிருக்குப் பாதுகாப்பில்லை. மாறு வேடத்தில் அலைய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது

காங்கிரசு ஆட்சி எதிர்கட்சியின் கேள்விக் கணைகளுக்கு கொலைக்கருவி தாங்காமல் விடை எனும் கேடயத்தைத் தாங்க வேண்டும். காங்கிரசு மாணவர்களைத் தங்கள் பக்கம் சேர வைப்பதற்குப் பணம் செலவழிக்க வேண்டாம். மாணவர்களின் ஆதரவு எதிர்க் கட்சிகளுக்குத்தான். மாணவர்கள். காங்கிரசு என்ற கள்ளத்தோணியில் ஏறமாட்டார்கள்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது காங்கிரசுக்காரர்கள் உயர்நிலைப்பள்ளி மாணவர்களிடம் கைவரிசை காட்டாது கல்லூரி மாணவர்களிடம் கைவரிசை காட்டியிருந்தால் அவர்களுக்கு நினைவுநாள் கொண்டாட வேண்டி வந்திருக்கும். தப்பிக்க வேறு வழியில்லாத சமயத்தில் பூனை எப்படி புலியாக மாறுமோ அது போல் மாணவர்களும் கிளர்ச்சியில் ஈடுபடுவர். காவல் துறையினர். மாணவர்களைச் சமமாக மதிக்கவேண்டும். காவல் துறையினர் சட்டத்தின் காவலர்களே அன்றி தலைவிதியின் காவலர்கள் அல்லர்.

மாணவர் உலகம் தலைநிமிர்ந்து நிற்க அன்னைத்தமிழ் தழைக்ககாங்கிரசை ஆட்சியில் இருந்து அகற்ற பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்' இவ்வாறு மாணவர் தலைவர் சீனிவாசன் கூறினர்.

### செயப்பிரகாசம்

செயப்பிரகாசம்பேசுகையில், கையில் அரிவாளுடன் தெருவில் நடமாடியவர்கள் இன்று கல்லூரிகளில் காலடிவைக்க ஆரம்பித்துவிட்டனர் என்று குறிப்பிட்டார், "கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும். என்று பொன்மொழி ஒன்றுண்டு. காங்கிரசு ஆட்சியில்" கேளுங்கள் துப்பாக்கிக் குண்டுகள் தரப்படும், தட்டுங்கள் முதுகுத்தோல் உரிக்கப்படும்" என்ற நிலையே உள்ளது.மதுரை மருத்துவக் கல்லூரியில் காங்கிரசார் புகுந்து திருவிளையாடல் நடத்தியிருக்கின்றனர், மாணவர்கள் சார்பாக இருந்த விடுதிக்காப்பாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

மாணவர்களுக்கு நிகழும் தீங்குக்கு காவல்துறையினர் எந்தவிதக் காப்பும் கொடுக்கவில்லை. எங்களது உயிருக்கு எந்தவித காப்பும் கிடையாது. இதனல் மீண்டும் ஒருபுரட்சி ஏற்படுமேயாகில் அது மேலமாசிவீதி "குறிஞ்சி" யில் தொடங்கும்.

மதுரைப் பல்கலைக்கழகம் காங்கிரசுக்கட்சி அலுவலகமாக ஆக்கப்பட்டு வருகிறது. வரப்புயர நீர்உயரும், நீர் உயர நெல் உயரும் என்பார்கள். காங்கிரசு ஆட்சியில் திட்டம் உயர வரிவளரும், வரிவளர லஞ்சம்வளரும், லஞ்சம்வளர காங்கிரசின் செல்வம் பெருகும். காங்கிரசு ஆட்சி நீடித்தால் வீட்டுக்கு வீடு கல்லறையும், வீதிக்கு வீதி சுடுகாடும் இருக்கும். இந்த நிலையை நீடிக்கவிடாமல் 1967 தேர்தலில் பொதுமக்கள் மாணவர்களுக்கும், எதிர்க் கட்சிகளுக்கும் ஒத்துழைப்பு வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

### இராசா முகமது

சட்டக் கல்லூரி மாணவர் இராசாமுகமது காங்கிரசை வித்தை காட்டும் கூட்டம் எனக்"குறிப்பிட்டார். தமிழின் மீது ஆணையாக மாணவர்கள் தமிழ் மொழிக்குத் தீங்கு இழைக்கும்காங்கிரசைஒழிக்க எதிர்க்கட்சியுடன் உடன்பாடு செய்கிறார்களே அன்றி வேறு எந்தக்காரணத்தினலும்அல்ல

குடியாட்சியை நம்பியிருந்த மாணவர்கள் கசாப்புக் கடைக்காரர்களைச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.குடியாட்சியை மாணவர்கள் நம்புகிறார்கள். குடியாட்சி மாணவர்களை ஏமாற்றுமேயாகில்விலைமதிக்க முடியாத உயிர் போயினும் இந்தியை எதிர்த்துப் போராடி காங்கிரசை ஆட்சியில் இருந்து இறக்கிவிட மாணவர்கள் ஆயத்தமாயுள்ளனர். மாணவர் தேர்தல் படைக்குசென்னையில் இருந்து 1000-பேர் வர ஆயத்தமாய் உள்ளனர். எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் மானம் பறிபோகும் என்று கூறும் காங்கிரசு நேற்று விடுதலை பெற்ற நாட்டிடம் கடன் வாங்குவதால் மானம் போவதை எண்ணிப் பார்க்கவேண்டும். உருசியா சென்று வந்த காமராசர் உருசியாவில் 16 மொழிகள் ஆட்சிமொழியாக இருப்பதை அறிந்துணர்ந்து இங்கு மொழிச்சிக்கலுக்கு தீர்வுகண்டிருக்க வேண்டும். குடியாட்சி நாட்டில் தனிமனிதன் செல்வாக்கு கூடாது. ஒரு தேசிய மொழி கூடாது. 14 மொழிகளும்ஆட்சிமொழியாக்கப்பட வேண்டும்.

தமிழ்மொழி ஆட்சி மொழியாக்கப் படாவிட்டால் ஒருமைப்பாடு சிதையும், 27 முறை திருத்திய அரசியல் சட்டத்தைக் காங்கிரசால் திருத்தமுடியாவிட்டால்மாணவர்களிடம் விட்டுவிடட்டும், மும்மொழித்திட்டத்தை மாணவர்கள் ஏற்கவில்லை, தமிழ் ஆட்சிமொழி ஆவதற்கு ஆயிரமாயிரம் மாணவர்களின் உயிர்கள் காத்திருக்கின்றன. காவல் துறையினர் அடுத்த முறை காங்கிரசுதான் வரும் என்று எண்ண வேண்டாம். தவறு செய்வது யாராயிருப்பினும், எந்தக் கட்சியாயிருப்பினும் ஒறுக்க வேண்டும்.

காங்கிரசு ஆட்சியில் மாணவர்கள் வீட்டிற்குத் திரும்பமுடியவில்லை. விடுதிக்குச் செல்லமுடியவில்லை.மாணவர்களின் உயிருக்குக் காப்புக் கிடையாது. தி. மு. க. முன்னேற்றக்கட்சி நண்பர்கள் மாணவர்களுடன்ஒத்துழைக்க.

(2-ம் பத்தி பார்க்க)

## இடமாற்றம்

20-11-66-ம் நாள் நடக்கவிருந்த தி. மு. க. கலை நிகழ்ச்சி அதே நாளில் திருப்பரங்குன்றம் மலைக்குப் போகும் பாதையில் நடக்கும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

**எம். சி. ஆர். மன்றம்,**
சந்திரபாளையம்.

## "குறள்நெறி" நாளிதழ்

தனி இதழ் விலை காசு 6.

அஞ்சல் வழியாகப் பெறுவதற்குத் திங்கள் கட்டணம் உரு. 2-50
ஆண்டுக்கட்டணம் உரு. 25-00
புரவலர் கட்டணம் உரு. 1000-00

விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விளம்பரங்கள் பெற்று அனுப்புவோர்க்கு 25°/。 கழிவு உண்டு.

"குறள் நெறி" திங்களிருமுறை : தமிழ் :

தனி இதழ் விலை 25 காசு.
ஆண்டுக் கட்டணம் உரு. 6-00
இரண்டாண்டுக் கட்டணம் உரு 10-00
புரவலர் கட்டணம் உரு. 100-00

"குறள்நெறி" திங்களிருமுறை : ஆங்கிலம்:

தனி இதழ் விலை 20 காசு.
ஆண்டுக் கட்டணம் உரு. 5-00

ஊர்கள் தோறும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

விவரங்கட்கு :

ஆசிரியர்
**'குறள்நெறி'**
திருப்பரங்குன்றம்
மதுரை—5

தொண்டைக் கோளாறுகள், இருமல், நெஞ்சுவலி முதலியன போக்கும்.

## இன்குரல்

நீடித்த நல்வாழ்விற்கு **மணி** மலமிளக்கி வில்லைகள்

தலைவலி, உடல்வலி, சுரம் போக்கும் **வேல்** வில்லைகள்

தயாரிப்போர் :—

**கமலாராம் கம்பெனி,**
23-தெற்குப்பெருமாள் மேச்திரி வீதி, மதுரை-1.

வெளியிடுபவர் டாக்டர் சி. இலக்குவனார். பொறுப்பாசிரியர் ஐ. மறைமலை பி. [illegible] குறள்நெறி அச்சகம், திருப்பரங்குன்றம். மதுரை 5 தொலைபேசி 8-65